பெயர்: .......................... தேதி: ..........................

# நரியும் ஆடும்

ஒரு காட்டில் பொல்லாத நரி ஒன்று வசித்தது. ஒரு நாள் உணவு தேடி அங்கும், இங்கும் பசியோடு அலைந்து கொண்டு இருந்தது. அப்போது தூரத்தில் கொழுத்த ஆடு ஒன்று வருவதைப் பார்த்தது. ஆட்டினைப் பார்த்ததும் நரிக்கு நாக்கில் எச்சில் ஊறியது. உடனே சோர்வாக இருப்பது போல் படுத்துக்கொண்டது. நரியைக் கண்டதும் ஆடு வேகமாக ஓட ஆரம்பித்தது. ஆடே நான் மிகவும் சோர்வாக இருக்கிறேன். என்னைப் பார்த்து பயப்படாதே! நான் சைவத்திற்கு மாறிவிட்டேன். அதனால் என்னை உன் நண்பனாக ஏற்றுக்கொள் என்றது. நரியின் சூழ்ச்சியை ஆடு உணர்ந்து கொண்டது.

தந்திரமுள்ள நரியே உன்
தந்திரம் என்னிடம் பலிக்காதே!
பாய்ந்து போவேன் நானே
கொஞ்சம் பலமிருந்தால்
துரத்தி வருவாய் நீயே!

என்று பாடிக்கொண்டே ஆடு வேகமாக ஓடியது. நரி ஏமாந்து போனது.

பெயர்: ............................ தேதி: ............................

# பயிற்சிகள்

## I, வினாக்களுக்கேற்ற விடையளி:

1. நரி தூரத்தில் யார் வருவதைப் பார்த்தது?

2.“என்னை உன் நண்பனாக ஏற்றுக்கொள்” என்று கூறியது யார்?

3. ஆடு பாடியப் பாடலை எழுதுக.

## II, கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. தந்திரம் என்னிடம் பலிக்காதே!

_______________ நானே

2. _______________

துரத்தி வருவாய் நீயே!

## III, கட்டத்தில் உள்ள சொற்களை எடுத்து எழுதுக:

| | |
|---|---|
| நரி<br>ஆடு | ஓடியது<br>ஏமாந்தது<br>பாடியது<br>வசித்தது |

1. நரி வசித்தது 2. __________ 3. __________ 4. __________